**நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.I, திண்டிவனம்,**

**முன்னிலை: ஸ்ரீமதி. ம. இளவரசி M.L.,**

**நீதித்துறை நடுவர் எண். I திண்டிவனம்.**

**2026 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 18 -ம் நாள் புதன்கிழமை**

**2056 திருவள்ளுவராண்டு விசுவாவசு வருடம் பங்குனி திங்கள் 04-ம் நாள்**

**CC. No.258 of 2020**

**(CNR No.TNVP10-00838-2020)**

| | | | |
|---|---|---|---|
| 1) | வழக்கு எண் | : | C.C.No.258/2020 |
| 2 | குற்ற முறையீடுபவர் | : | தமிழ்நாடு அரசு அதன் சார்பாக<br>காவல் உதவி ஆய்வாளர்,<br>ரோஷணை காவல் நிலையம்,<br>குற்ற எண். 172/2019,<br>இதச பிரிவுகள் 294(b), 506(1), 353 |
| 3 | எதிரிகளின் விவரம் | | 1. நாகராஜ், வயது 35,<br>த/பெ கணேசன்,<br>3 வது குறுக்கு தெரு,<br>சஞ்சீவிராயன்பேட்டை<br>திண்டிவனம்.<br>2. வெங்கடேசன், வயது 33,<br>த/பெ கணேசன்,<br>3 வது குறுக்கு தெரு,<br>சஞ்சீவிராயன்பேட்டை<br>திண்டிவனம் |
| 4 | சம்பவ தேதி | : | 11.05.2019 |
| 5 | முறையீடு | : | 12.05.2019 |

ELAVARASI Digitally signed by ELAVARASI Date: 2026.03.18 19:11:17 +0530

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 6 | எதிரி நீதிமன்ற காவலில் இருந்த நாள் | : | Anticipatory Bail | | |
| 7 | குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்ட நாள் | : | 30.12.2020 | | |
| 8 | குற்றச்சாட்டு வனையப்பட்ட நாள் | : | 22.09.2022 | | |
| 9 | தாக்கல் செய்யப்பட்ட குற்ற பல்வகை மனுக்களின் விவரம் | : | ---- | | |
| 10 | சாட்சிகளின் விசாரணை | : | **Witness** | **Date of Chief** | **Date of Cross** |
| | | | PW-1 | 15.11.2024 | 20.11.2024 |
| | | | PW-2 | 21.07.2025 | 21.07.2025 |
| | | | PW-3 | 21.07.2025 | 21.07.2025 |
| | | | PW-4 | 11.08.2025 | 11.08.2025 |
| | | | PW-5 | 11.03.2026 | 11.03.2026 |
| 11 | கு.வி.மு.ச. பிரிவு 313(1)(b) - ன் கீழ் எதிரியிடம் கேள்வி கேட்கப்பட்ட நாள் | : | 13.03.2026 | | |
| 12 | எதிரிகள் தலைமறைவு காலம் பற்றிய விவரம் | : | இல்லை | | |
| 13 | மேல்முறையீடு நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்ட இடைக்கால தடை உத்தரவு பற்றிய விவரங்கள் | : | இல்லை | | |

ELAVARASI Digitally signed by ELAVARASI
Date: 2026.03.18 19:11:24 +0530

| | | | |
|---|---|---|---|
| 14 | தண்டனை அல்லது உத்தரவு | : | எதிரிகள் மீது இதச பிரிவுகள் 294(b), 353, 506(i) ன் கீழான குற்றமானது அரசு தரப்பு சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்படாததால் எதிரிகள் குற்றவாளிகள் இல்லை என தீர்மானித்து கு.வி.மு.ச.பிரிவு 248(1) - ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது. |
| 15 | காலதாமதத்தின் விளக்கம் | : | ___ |

இவ்வழக்கானது கடந்த 30.12.2020-ம் தேதி இந்நீதிமன்ற கோப்பில் எடுக்கப்பட்டு, இந்த வழக்கானது இந்நீதிமன்றத்தில் 13.03.2026-ம் தேதி இறுதி விசாரணைக்கு வந்த போது, அரசு தரப்பில் அரசு குற்றத்துறை வழக்கறிஞர் நிலை 2 அவர்கள் ஆஜராகியும், எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.M.D.பாபு, B.A., L.L.B., அவர்கள் ஆஜராகியும், விசாரணைக்கு வரப்பெற்று இருதரப்பு வாதம் கேட்கப்பட்டு பின்பு வழக்கு ஆவணங்களையும் பரிசீலக்கப்பட்டு இன்று இந்நீதிமன்றத்தில் வழங்கும்.,

## தீர்ப்புரை

### 1) குற்ற அறிக்கையின் சுருக்கம்:-

இவ்வழக்கில் கோவிந்தராஜ் என்பவர் 11.05.2019 ம் தேதியன்று மாலை 18.45 மணியளவில் திண்டிவனம் அரசு மருத்துவமனை புறக்காவல் நிலைய பணியில் இருந்தபோது அவசர சிகிச்சை பிரிவு நுழைவு வாயில் இருந்த ஒரு நபர் கோவிந்தராஜிடம் வந்து அவசர சிகிச்சை பிரிவில் சண்டை போட்டுக்கொள்வதாக

ELAVARASI Digitally signed by ELAVARASI Date: 2026.03.18 19:11:29 +0530

கூறியதால் கோவிந்தராஜ் சென்று என்ன பிரச்சினை என்று சண்முகம் என்பவரை பார்த்து கேட்டதற்கு அவர் தன்னுடைய மனைவிக்கு உடல்நிலை சரியில்லாத காரணத்தால் அவரை மேல் சிகிச்சைக்கு சென்னை அரசு மருத்துவமனைக்கு அழைத்து செல்ல தங்களுக்கு தெரிந்த TN 01 M 3211 என்ற தனியார் ஆம்புலன்ஸ் மூலம் கொண்டு செல்ல முற்பட்டபோது இண்டு நபர்கள் வந்து அசிங்கமாக திட்டி அடிக்க வருவதாக கூறியதை கேட்டு எதிரிகளிடம் கோவிந்தராஜிடம் முழு சீருடையில் சென்று ஏன் உங்களுக்கு என்ன பிரச்சினை ஆம்புலன்சுக்கு விழிவிடுங்கள் என்று கூறியுள்ளார். அதற்கு 1வது எதிரி கோவிந்தராஜை பார்த்து நீங்க போலீஸ் தானே இந்த வண்டியில் பர்மிட், ஆர்.சி. புக் இருக்குதா என்று செக் பண்ணுங்க என்று சத்தம் போட்டு பேசினார். கோவிந்தராஜிடம் அவரிடம் இப்ப செக் பண்றதுக்கு நேரம் கிடையாது முதலில் ஆம்புலன்சை அனுப்புங்கள் அதன் பிறகு எதுவா இருந்தாலும் பேசிக்கலாம் என்று பணிவோடு கூறியதற்கு கோவிந்தராஜை பார்த்து கையை நீட்டிக்கொண்டு போலீஸ்கார நாய்ங்களே இப்படித்தான் பேசுவீங்க என்று அசிங்கமாக பேசிக்கொண்டு இருக்கும்போதே 2வது எதிரி வெங்கடேசன் என்பவர் உடனே குறுக்கே வந்து நீ என்ன பெரிய மயிரா நீ அவரை கேட்கமாட்டியா என்று அசிங்கமான வார்த்தையால் கை நீட்டி பேசிக்கொண்டு முழு சீருடையில் இருந்த கோவிந்தராஜை பணி செய்யவிடாமல் தடுத்து பெட்டிசன் பேட்டு உன் வேலையை காலி பண்றேன் பார் என்றும், நீ டுட்டி முடித்துவிட்டு வெளியே வரும்போது உன்னை ஒழிச்சிகட்டிடுவேன் என்று கொலை மிரட்டல் விடுத்து குற்றம் புரிந்ததாக எதிரிகள் மீது இதச பிரிவுகள் 294(b), 353, 506(ii) ன்படி

ELAVARASI Digitally signed by ELAVARASI
Date: 2026.03.18 19:11:35 +0530

ரோஷணை காவல் உதவி ஆய்வாளர் அவர்களால் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) இந்நீதிமன்றத்தால் கோப்பிற்கு எடுக்கப்பட்ட இவ்வழக்கானது இதச பிரிவுகள் 294(b), 353, 506(i) ன் கீழ் விசாரணைக்கு எடுக்கப்பட்டு எதிரிகளுக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டது.

3) எதிரிகள் நீதிமன்றத்தில் ஆஜரான போது வழக்கு ஆவணங்களின் நகல்கள் கு.வி.மு.ச.பிரிவு 207-ன் கீழ் இலவசமாக வழங்கப்பட்டுள்ளது.

4) வழக்கின் ஆவணங்களை பரிசீலனை செய்ததில் எதிரிகள் மீது குற்றச்சாட்டு வினவுவதற்கு போதுமான முகாந்திரம் இருந்ததால் எதிரிகள் மீது இதச பிரிவுகள் 294(b), 353, 506(i) ன் கீழான குற்றச்சாட்டுகள் குறித்து வனைந்து விளக்கி கூறி வினவிய போது எதிரிகள் அவற்றை மறுத்து தாங்கள் குற்றவாளிகள் இல்லை என்று கூறியதால் அரசு தரப்பில் சாட்சி விசாரணை மேற்கொள்ளப்பட்டது.

5) இந்த வழக்கில் அரசுத்தரப்பில் அ.சா. 1 முதல் அ.சா. 5 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டுள்ளார்கள். அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.5 வரையிலான சான்றாவணங்கள் முன்னிடப்பட்டுள்ளது. எதிரிகள் தரப்பில் சாட்சியம் அளிக்கப்படவில்லை.

ELAVARASI Digitally signed by ELAVARASI Date: 2026.03.18 19:11:39 +0530

**<u>6) அரசு தரப்பு சாட்சிகளின் சுருக்கம்</u>**

- ➔ பாதிக்கப்பட்ட மற்றும் நிகழ்நிலை புகார்தாரரான அ.சா.1 சம்பவம் பற்றியும், புகார் அளித்தது பற்றியும் சாட்சியம் அளித்துள்ளார்.
- ➔ கண்ணுற்ற சாட்சிகளாக முன்னிலைப்படுத்தப்பட்ட அ.சா.2, அ.சா.3 ஆகியோர் அரசு தரப்பு வழக்கிற்கு ஆதரவளிக்காமல் சாட்சியம் அளித்துள்ளனர்.
- ➔ பார்வை மகசர் சாட்சியாக முன்னிலைப்படுத்தப்பட்ட அ.சா.4 காவல் நிலையத்தில் கையொப்பம் செய்ததாக அரசு தரப்பு வழக்கிற்கு ஆதரவளிக்காமல் சாட்சியமளித்துள்ளார்.
- ➔ காவல் ஆய்வாளர் அ.சா.5 வழக்கின் புலன் விசாரணை முடித்து எதிரிகள் மீது குற்ற அறிக்கை தாக்கல் செய்தது பற்றி குறிப்பிட்டுள்ளார்.

7). அரசு தரப்பு சாட்சியங்களிலிருந்து எதிரிகளை பாதிக்கக்கூடிய அம்சங்கள் குறித்து எதிரிகளிடம் கு.வி.மு.ச.பிரிவு 313(1)(b)-ன் கீழ் வினவியபோது எதிரிகள் பொய் சாட்சி என்றும், பொய் வழக்கு என்றும், தனது தரப்பில் விசாரிக்க சாட்சிகள் இல்லை என்று தெரிவித்தனர். எனவே, எதிரிகள் தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டது.

**8) <u>தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சனை:-</u>**

**இவ்வழக்கில் தீர்மானிக்க வேண்டிய பிரச்சனை யாதெனில் இதச பிரிவுகள், 294(b), 353 506(1) ன் கீழான குற்றச்சாட்டுகள் அரசு தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா? என்பதேயாகும்.**

9. இருதரப்பும் கேட்கப்பட்டது. வழக்கு கோப்பு மற்றும் சாட்சியங்கள் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டது.

ELAVARASI Digitally signed by ELAVARASI Date: 2026.03.18 19:11:45 +0530

10.அரசு தரப்பில் வாய்மொழி வாதம் முன்வைக்கப்படவில்லை.

11. எதிரிகள் தரப்பில் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர் அவரது வாதத்தில் இவ்வழக்கில் அ.சா.2 முதல் அ.சா.4 ஆகியோர் அரசு தரப்பு வழக்கிற்கு ஆதரவளிக்காமல் சாட்சியம் அளித்துள்ளனர். அ.சா.1 சம்பவம் குறித்து முரண்பட சாட்சியம் அளித்துள்ளார். புகாரில் சம்பவ சமயத்தில் உதவி ஆய்வாளர் சம்பவ இடத்துக்கு வந்து விசாரித்ததாக குறிப்பிட்டுள்ள நிலையில், மறுநாள் புகார் கொடுத்ததாகவும், 17 நாட்கள் கழித்து 28.05.2019 அன்று முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ததாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. சம்பவத்துக்கு பிறகும் அ.சா.1 அன்றைய பணியை முடித்துவிட்டு மறுநாள் காலையில் புகார் அளித்ததாக குறிப்பிட்டுள்ள நிலையில், அவருடைய பணி என்ன பாதிக்கப்பட்டது என சாட்சியம் அளிக்கவில்லை. எனவே சந்தேகத்தின் பலனை அளித்து எதிரிகளை குற்றவாளிகள் அல்ல என தீர்மானித்து விடுதலை செய்யுமாறு வாதிட்டார்.

**12) சாட்சிய பரிசீலனைகளும், தீர்வும் ;**

இவ்வழக்கில் பாதிக்கப்பட்ட மற்றும் நிகழ்நிலை புகார்தாரரான **அ.சா.1 திரு. கோவிந்தராஜ்** அவரது சாட்சியத்தில் கடந்த 11.05.2019 அன்று வெள்ளிமேடுப் பேட்டை காவல் நிலைய தலைமை காவலராக பணியில் இருந்தபோது திண்டிவனம் அரசு மருத்துவமனை புற காவல் நிலையத்திற்கு பாதுகாப்பு பணியில் இருந்ததாகவும், மாலை 6:45 மணி அளவில் தகவல் கேள்விப்பட்டு அவசர சிகிச்சை பிரிவுக்கு சென்று பார்த்த போது சண்டை போட்டுக் கொண்டிருந்தார்கள் எனவு, TN 01 M 3211 பதிவெண் கொண்ட சாமி அண்ட் கோ என்ற தனியார் ஆம்புலன்சில் விமலா என்ற நோயாளியை ஏற்றிக்கொண்டிருந்தபோது மருத்துவமனைக்கு வெளியே நின்று கொண்டிருந்த எதிரிகள் அதனை ஏற்றவிடாமல் சண்டை போட்டுக் கொண்டிருந்தார்கள் எனவும், முழு சீருடையில் இருந்த அ.சா.1 எதிரிகளிடம்

ELAVARASI Digitally signed by ELAVARASI Date: 2026.03.18 19:11:51 +0530

ஆம்புலன்ஸை விடுமாறும் பிறகு பேசிக் கொள்ளலாம் என சொன்னபோது எதிரிகள் அசிங்கமான வார்த்தைகளால் திட்டி பணி செய்ய விடாமல் தடுத்து கையால் நெட்டி தள்ளினார்கள் எனவும், நாகராஜ் அந்த சமயம் குடிபோதையில் இருந்தார் எனவும், டூட்டி முடித்துவிட்டு வெளியே தான் வரவேண்டும் உன் யூனிபார்மை கழட்டி வேலை இல்லாமல் செய்கிறேன் பார் என மிரட்டினார்கள் எனவும், தான் ரோஷணை காவல் நிலையத்தில் போன் மூலமாக தகவல் கொடுத்துவிட்டு பணி முடிந்து மறுநாள் காவல் நிலையம் சென்ற புகார் அளித்ததாகவும் சாட்சியம் அளித்து எதிரிகளை அடையாளப்படுத்தி உள்ளார்.

13. எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணையில் அ.சா.1 சம்பவம் நடந்த உடனே ரோஷணை போலீசார் சம்பவ இடத்துக்கு வந்து விசாரித்தார்கள் எனவும், அவ்வாறு விசாரிக்கும்போது எதிரிகளை தான் அடையாளம் காண்பித்ததாக புகாரில் உள்ளதாகவும், சம்பவத்துக்கு மறுநாள் காலை புகார் கொடுத்ததாகவும், புகாரில் எதிரிகள் மற்றும் 3 நபர்கள் பேச ஆரம்பித்தார்கள் என கூறியுள்ளதாகவும், அவசர சிகிச்சை பிரிவில் பிரச்சனை என தன்னிடம் அஞ்சலை, சண்முகம் ஆகியோர் சொன்னதாகவும் குறிப்பிட்டுள்ளார். அன்றைய தினம் சம்பவம் நடந்ததாக சொல்லும் இடத்திலும், வெளியிலும் சிசிடிவி கேமரா பதிவாகும் வகையில் இருந்ததாகவும், தான் செல்போனில் வீடியோ எடுக்க முயன்றபோது அதனை எதிரிகள் தட்டி விட்டார்கள் எனவும், எதிரிகள் தன்னை நெட்டி தள்ளியதற்கு தான் சிகிச்சை எடுத்துக் கொள்ளவில்லை எனவும் குறிப்பிட்டுள்ளார். தான் புகார் கொடுத்தபோது உடனடியாக விசாரித்தார்கள் எனவும், ஆனால் வழக்கு பதிவு செய்யவில்லை எனவும், இது குறித்து தான் உயர் அதிகாரியை அணுகவில்லை எனவும்

ELAVARASI Digitally signed by ELAVARASI
Date: 2026.03.18 19:11:56 +0530

குறிப்பிட்டுள்ளார்.

14. கண்ணுற்ற சாட்சியாக முன்னிலைப்படுத்தப்பட்ட **அ.சா.2 திரு. சண்முகம்** அவரது சாட்சியத்தில் சுமார் 5, 6 வருடத்திற்கு முன்னதாக ஒரு நாள் காலை 7 மணியளவில் ஊர் விழாவின்போது தனது மனைவி விமலா சாமி கும்பிட சென்றபோது டிராக்டர் மோதி முதுகு, தண்டுவடம் உடைந்துவிட்டதாகவும், திண்டிவனம் அரசு மருத்துவமனையில் அழைத்துசென்றுவிட்டு மேல் சிகிச்சைக்காக முண்டியம்பாக்கம் அல்லது சென்னை அரசு மருத்துவமனைக்கு செல்லுமாறு பரிந்துரைத்தார்கள் எனவும், மருத்துவமனையில் வெளியே இரண்டு ஆம்புலன்ஸ்கள் இருந்தபோது யார் செல்வது என சண்டை போட்டுக் கொண்டார்கள் எனவும், போலீசார் ஆம்புலன்ஸ் டிரைவரிடம் பேசி உள்ளார்கள் எனவும், தான் அப்போது அங்கு இல்லை எனவும், இரண்டு ஆம்புலன்ஸில் ஒரு ஆம்புலன்ஸில் தனது மனைவியை ஏற்றிக்கொண்டு சென்னைக்கு சென்றுவிட்டதாகவும் ஆம்புலன்ஸ் டிரைவர்கள் எதிரிகளா என 5, 6 வருடம் ஆனதால் நினைவில்லை எனவும் குறிப்பிட்டுள்ளார்.

15. எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணையில் அ.சா.2 ஒரு தரப்பில் எங்கள் தரப்பிலும் மற்றொரு தரப்பில் போலீசாரும் ஆம்புலன்ஸ் அழைத்து வந்ததால் வாக்குவாதம் ஏற்பட்டதாக குறிப்பிட்டுள்ளார். நீதிமன்ற கேள்வியின் போது இரண்டு டிரைவர்கள் வாய்மொழியாக பேசிக் கொண்டிருந்தபோது தான் அப்போதுதான்

ELAVARASI Digitally signed by ELAVARASI Date: 2026.03.18 19:12:02 +0530

மருத்துவமனையில் இருந்து வந்ததாகவும், மனைவியை அழைத்து செல்லும் அவசரத்தில் அதை கவனிக்கவில்லை எனவும், அந்த இரண்டு ஆம்புலன்ஸ்களில் ஒரு ஆம்புலன்ஸில் தான் சென்றதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

16. மற்றொரு கண்ணுற்ற சாட்சியாக முன்னிலைப்படுத்தப்பட்ட **அ.சா.3 திரு.அருண்ராஜ்** அவரது சாட்சியத்தில் சுமார் 2,3 வருடத்திற்கு முன்னதாக ஒரு நாள் காலை 7 மணி அளவில் ஊர் திருவிழாவின்போது தனது சித்தி விமலாவின் மீது டிராக்டர் மோதி முதுகு எலும்பு உடைந்ததால், திண்டிவனம் அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றதாகவும், அங்கிருந்து மேல் சிகிச்சைக்கு பரிந்துரை செய்ததால் தனது சித்தி விமலாவை அழைத்து செல்ல தனியார் ஆம்புலன்ஸ் இருந்ததால், தனது மாமா தீர்த்தமலை அதில் ஒரு ஆம்புலன்ஸை அழைத்து வந்தார் எனவும், மருத்துவமனையில் வெளியே இருந்த தனியார் ஆம்புலன்ஸ் ஓட்டுநர்களும், மாமா அழைத்து வந்த ஆம்புலன்ஸ் ஓட்டுநர்களும் சண்டை வந்திருக்கலாம் எனவும், அதன் பின்னர் அதில் ஒரு ஆம்புலன்சில் சென்று விட்டோம் எனவும், என்ன நடந்தது என தெரியாது எனவும் குறிப்பிட்டுள்ளார். அ.சா.2, அ.சா.3 ஆகியோர் பிறழ் சாட்சியமாக கருதப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்பட்டுள்ளனர்.

17. கடந்த 11.05.2019 மாலை 6:45 மணி அளவில் திண்டிவனம் அரசு மருத்துவமனையின் வெளியே அ.சா.2, அ.சா.3 ஆகியோர் அ.சா.2 ன் மனைவி

ELAVARASI Digitally signed by ELAVARASI Date: 2026.03.18 19:12:07 +0530

விமலாவை மேல் சிகிச்சைக்காக வேறு மருத்துவமனைக்கு அழைத்துச் செல்ல அவர்கள் தரப்பில் ஒரு ஓட்டுநரை அழைத்து வந்தபோது எதிரிகள் பிரச்சினை செய்ததாகவும், மருத்துவமனை புற காவல் நிலையத்தில் பணியில் இருந்த அ.சா.1 அதனை கேட்டபோது எதிரிகள் ஆட்டோ ஒன்றை தகாத வார்த்தைகளால் திட்டி கொலை மிரட்டல் விடுத்து பணி செய்யாமல் தடுத்தார்கள் என்பது அரசு தரப்பு வழக்காகும்.

18. பாதிக்கப்பட்ட சாட்சியான அ.சா.1 சம்பவம் பற்றி சாட்சியம் அளித்துள்ளார். சட்டப்பிரிவு 353 -ன் கீழாக குற்றச்சாட்டு வனையப்பட்டுள்ள நிலையில் அ.சா.1 அரசு ஊழியர் என்பதற்கும், சம்பவ சமயத்தில் திண்டிவனம் அரசு மருத்துவமனையில் புற காவல் நிலையத்தில் பணியில் இருந்ததற்கும் எந்த ஆவணமும் கைப்பற்றி தாக்கல் செய்யப்படவில்லை. மருத்துவமனையின் வெளியே நோயாளியை ஆம்புலன்ஸில் ஏற்றி செல்வதற்காக பிரச்சனை நடந்துள்ள நிலையில், மருத்துவமனையில் உள்ள ஊழியர்கள் யாரும் சாட்சியாக விசாரிக்கப்படவில்லை. மருத்துவமனையிலிருந்து அழைத்து செல்ல இருந்த விமலாவின் கணவரான அ.சா.2 மற்றும் அவரது உறவினர் அ.சா.3 அருண்ராஜ் ஆகியோர் சம்பவம் பற்றி தெரியாது என அரசு தரப்பு வழக்கிற்கு ஆதரவளிக்காமல் சாட்சியம் அளித்துள்ளனர். ஆம்புலன்ஸ் ஓட்டுனர் பட்டியல் சாட்சி - 3 கவின் என்பவரை கண்டுபிடிக்க இயலவில்லை என ரோஷணை காவல் நிலைய நிலைய பொறுப்பு அதிகாரியால் அறிக்கை வழங்கப்பட்டுள்ளது. கண்ணுற்ற சாட்சியான பட்டியல் சாட்சி - 4

ELAVARASI Digitally signed by ELAVARASI Date: 2026.03.18 19:12:13 +0530

அஞ்சலை இறந்துவிட்டதாக இறப்பு சான்றிதழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எனவே பட்டியல் சாட்சி -3 மற்றும் பட்டியல் சாட்சி - 4 வழக்கு விசாரணையில் இருந்து விலக்கப்பட்டுள்ளனர். சம்பவ இடத்தில் சிசிடிவி பதிவு உள்ளதாக அ.சா.1 குறிப்பிட்டுள்ள நிலையில், இவ்வழக்கு சம்பவம் குறித்து சிசிடிவி பதிவுகள் எதுவும் கைப்பற்றி தாக்கல் செய்யப்படவில்லை. 11/5/2019 அன்று நடந்த சம்பவத்திற்கு 12.05.2019 அன்று புகார் கொடுக்கப்பட்டு சி.எஸ்.ஆர். பதிவு செய்யப்பட்ட பின்னர் 28.05.2019 அன்று வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. புகாரில் அ.சா.1 போனை எடுத்து வீடியோ ரெக்கார்ட் செய்ததாகவும் அப்போது எதிரிகள் மிரட்டி விட்டு சென்று விட்டதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. நீதிமன்ற சாட்சியத்தில் அ.சா.1 போனை எடுத்த ரெக்கார்ட் செய்ய முயற்சித்தபோது எதிரிகள் அதனை தட்டி விட்டதாக குறிப்பிட்டுள்ளார். புலன் விசாரணை அதிகாரி அவரது விசாரணையில் அ.சா.1 அவரது போனை தட்டிவிட்டதாக சொல்லவில்லை என குறிப்பிட்டுள்ளார். எனவே மேற்படி முரண்பாடுகளினால் சம்பவம் குறித்து சந்தேகிக்கும் வகையில் உள்ளது என இந்நீதிமன்றம் கருதுகிறது.

19. பார்வை மகசர் சாட்சியான **அ.சா.4 திரு.புரட்சி கண்ணன்** அவரது சாட்சியத்தில் கடந்த 2019 ஆம் வருடம் ஒரு நாள் காலை சுமார் 11 12 மணியளவில் ரோஷணை காவல் நிலையத்திற்கு சவாரிக்கு சென்றபோது போலீசார் கேட்டுக் கொண்டதால் வெள்ளைத்தாளில் பார்வை மகசரில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் செய்ததாக குறிப்பிட்டுள்ளார். அ.சா.4 பிறழ் சாட்சியமாக கருதப்பட்டு அரசு தரப்பில்

ELAVARASI Digitally signed by ELAVARASI Date: 2026.03.18 19:12:19 +0530

குறுக்கு விசாரணை செய்யப்பட்டுள்ளார்.

20. இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரி **அ.சா.5 திரு. ராம ஆண்டவர் காவல் ஆய்வாளர்** அவரது சாட்சியத்தில் கடந்த 28.05.2019 அன்று ரோஷணை காவல் நிலையத்தில் ஆய்வாளராக பணியில் இருந்தபோது அ.சா.1 கொடுத்த புகார் மனுவை பெற்று சிஎஸ்ஆர் பதிவு செய்யப்பட்டு இருந்ததாகவும், அதனை விசாரித்து வழக்கு பதிவு செய்ததாகவும், அன்றைய தினமே காலை 11 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் முன்னிலையில் பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்ததாகவும் குறிப்பிட்டுள்ளார். விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்ததாகவும் எதிரியை தேடி சென்றபோது எதிரிகள் தலைமறைவாக இருந்ததாகவும், பின்னர் முன்பிணை பெற்றதாகவும் குறிப்பிட்டுள்ளார். வழக்கின் புலன் விசாரணை முடித்துக்கொண்டு எதிரிகள் மீது இதச பிரிவுகள் 294(b), 353, 506(2) ன் கீழ் குற்ற இறுதி அறிக்கையை தாக்கல் செய்ததாக குறிப்பிட்டுள்ளார். எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணையில் புகாரில் எதிரிகள் மற்றும் மூன்று நபர்கள் பிரச்சனை செய்ததாக கூறியுள்ளதாகவும், விசாரணையில் அந்த மூன்று நபர்கள் பிரச்சினை செய்யவில்லை என குறிப்பிட்டுள்ளதாகவும், அந்த மூன்று நபர்கள் குறித்த விவரங்களை இறுதி அறிக்கையில் தாக்கல் செய்யவில்லை எனவும் குறிப்பிட்டுள்ளார். எதிரிகள் மறுத்ததாக சொல்லும் தனியார் ஆம்புலன்ஸ் குறித்து விசாரித்து அந்த ஆவணங்கள் கைப்பற்றி தாக்கல் செய்யவில்லை எனவும், பணியில் இருந்த மருத்துவர்கள் உள்ளே இருந்ததால் சம்பவம் குறித்து தெரியாது என

ELAVARASI Digitally signed by ELAVARASI Date: 2026.03.18 19:12:25 +0530

சொன்னதால் விசாரிக்கவில்லை எனவும், அ.சா.1 அவரது செல்போனில் சம்பவத்தை பதிவு செய்ய எதிரிகள் விடவில்லை என புகார் மற்றும் முதல் தகவல் அறிக்கையில் இல்லை எனவும், 11.05.2019 அன்று நடந்த சம்பவத்திற்கு 28.05.2019 அன்று வழக்கு பதிவு செய்யப்பட்டதாகவும், இடையில் சி எஸ் ஆர் பதிவு செய்யப்பட்டு விசாரிக்கப்பட்டதாகவும், அந்த சிஎஸ்ஆர் ஐ தாக்கல் செய்யவில்லை எனவும் குறிப்பிட்டுள்ளார். அவசர சிகிச்சை பிரிவில் பிரச்சனை என அ.சா.1-டம் அஞ்சலை, சண்முகம் ஆகியோர் சொன்னதாகவும் அவ்வாறு அவர்கள் சொன்னதாக விசாரணையில் இல்லை எனவும் குறிப்பிட்டுள்ளார்.

21. பாதிக்கப்பட்ட சாட்சி மற்றும் நிகழ்நிலை புகார்தாரரான அ.சா.1 சம்பவம் பற்றியும், புகார் அளித்தது பற்றியும் சாட்சியம் அளித்துள்ளார். அ.சா.1 சம்பவத்தன்று பணியில் இருந்ததற்கும், சம்பவ இடத்தில் அவருக்கு பணி ஒதுக்கப்பட்டிருந்தது குறித்தும் ஆவணம் கைப்பற்றி தாக்கல் செய்யப்படவில்லை. சம்பவத்திற்கு பிறகும் அ.சா.1 பணியை முடித்துவிட்டு மறுநாள் காலை புகார் கொடுத்ததாக சொல்லியுள்ளார். அ.சா.1 பணி பாதிக்கப்பட்டது குறித்து சாட்சியம் முன்னிடப்படவில்லை. கண்ணுற்ற சாட்சிகளாக முன்னிலைப்படுத்தப்பட்ட அ.சா.2, அ.சா.3 ஆகியோர் அரசு தரப்பு வழக்கிற்கு ஆதரவளிக்காமல் சாட்சியம் அளித்துள்ளனர். 11/5/2019 அன்று நடந்த சம்பவத்திற்கு மறுநாள் புகார் அளிக்கப்பட்டு சி.எஸ்.ஆர் பதிவு செய்யப்பட்டு, 28.05.2019 அன்று வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. பார்வை மகசர் சாட்சியான அ.சா.4 காவல் நிலையத்தில் கையொப்பம் செய்ததாக குறிப்பிட்டுள்ளார். மருத்துவமனையில்

ELAVARASI Digitally signed by ELAVARASI Date: 2026.03.18 19:12:32 +0530

நோயாளியை எந்த ஆம்புலன்ஸில் அழைத்து செல்வது என்பது குறித்து ஆம்புலன்ஸ் டிரைவர்களுக்கு இடையே பிரச்சனை ஏற்பட்டு புற காவல் நிலையத்தில் இருந்த போலீசாரை பணி செய்யாமல் தடுத்ததாக வழக்கு முன்னிலைப்படுத்தப்பட்டுள்ள நிலையில், மருத்துவ ஆவணங்கள் எதுவும் கைப்பற்றி தாக்கல் செய்யப்படவில்லை மருத்துவ ஊழியர்கள் யாரும் சாட்சியாக விசாரிக்கப்படவில்லை. மருத்துவமனையில் உள்ள சிசிடிவி பதிவுகள் கைப்பற்றி தாக்கல் செய்யப்படவில்லை. எனவே மேற்படி சாட்சியங்களில் இருந்து அரசு பணியில் இருந்த அ.சா.1-யை எதிரிகள் தகாத வார்த்தைகளால் திட்டி கொலை மிரட்டல் விடுத்து பணி செய்ய விடாமல் தடுத்தார்கள் என்ற குற்றச்சாட்டுகள் அரசு தரப்பில் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபணம் செய்யப்படவில்லை என இந்நீதிமன்றம் கருதுகிறது.

22. அரசு தரப்பு சாட்சியங்கள் அ.சா.1 முதல் அ.சா.5 வரையிலான சாட்சிகள் மற்றும் அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.5 வரையிலான சான்றாவணங்கள்படியாக இதச பிரிவுகள் 294(b), 353, 506(1) ன் கீழான குற்றச்சாட்டு சந்தேகத்திற்கு இடமற்ற வகையில் நிரூபணம் செய்யப்படவில்லை என இந்நீதிமன்றம் முடிவு செய்கின்றது.

**23. இறுதியாக, எதிரி மீது இதச பிரிவுகள் 294(b), 353, 506(1) ன் கீழான குற்றமானது அரசு தரப்பு சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்படாததால் எதிரிகள் குற்றவாளிகள்**

ELAVARASI Digitally signed by ELAVARASI Date: 2026.03.18 19:12:38 +0530

**இல்லை என தீர்மானித்து குவி.மு.ச. பிரிவு 248(1) - ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.**

24. இவ்வழக்கில் வழக்கு சொத்துக்கள் எதுவும் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படவில்லை. எதிரிகள் எழுதிக்கொடுத்த பிணைப்பத்திரம் அது இதன் மூலம் ரத்து செய்யப்படுகிறது.

என்னால் இத்தீர்ப்புரை சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக கணினயில் சொல்லப்பட்டு, அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, பின்னர் என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு 2026 ம் ஆண்டு மார்ச் திங்கள் 18 -ம் புதன்கிழமை -2026-ம் நாள் என்னால் அவையறிய பகரப்பட்டது.

ELAVARASI Digitally signed by ELAVARASI Date: 2026.03.18 19:12:44 +0530

நீதித்துறை நடுவர் எண். I,
திண்டிவனம்.

**இணைப்பு:-**

**அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகள்:-**

| | | |
|---|---|---|
| அ.சா.1 | திரு.கோவிந்தராஜ் | பாதிக்கப்பட்டசாட்சி மற்றும் நிகழ்நிலை புகார்தாரர் |
| அ.சா.2 | திரு.சண்முகம் | கண்ணுற்ற சாட்சி |
| அ.சா.3 | திரு.அருண்ராஜ் | கண்ணுற்ற சாட்சி |
| அ.சா.4 | திரு.புரட்சிக்கண்ணன் | பார்வை மகர் சாட்சி |

| | | |
|---|---|---|
| அ.சா.5 | திரு.ராம.ஆண்டவர்<br>காவல் ஆய்வாளர் | புலன் விசாரணை அதிகாரி |

**அரசு தரப்பில் குறியிடப்பட்ட சான்றாவணங்கள்:-**

| **அ.சா.ஆ. எண்கள்.** | **தேதி** | **ஆவணங்களின் விபரம்** | **ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்ட சாட்சிகள்** |
|---|---|---|---|
| அ.சா.ஆ.1 | 12.05.2019 | புகார் மனு | அ.சா. 1 |
| அ.சா.ஆ.2 | ------- | பார்வை மகசரில் உள்ள அ.சா.4 ன் கையொப்பம் | அ.சா. 4 |
| அ.சா.ஆ.3 | 28.05.2019 | முதல் தகவல் அறிக்கை | அ.சா.5 |
| அ.சா.ஆ.4 | 28.05.2019 | பார்வை மகசர் | அ.சா.5 |
| அ.சா.ஆ.5 | 28.05.2019 | மாதிரி வரைபடம் | அ.சா.5 |

**அரசு தரப்பில் குறியிடப்பட்ட சான்றுப்பொருட்கள்**:- இல்லை

**எதிரிகள் தரப்பில் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்**:-இல்லை

ELAVARASI Digitally signed by ELAVARASI Date: 2026.03.18 19:12:50 +0530

நீதித்துறை நடுவர் எண். I,

திண்டிவனம்.